# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – ஜனவரி 2018

## (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு
## PROCESSES, CONTROLS AND AUDIT

---

<u>**பொதுவான கருத்துக்கள்**</u>

**வினாத்தாள், விடைகள் மற்றும் பரீட்சார்த்திகளின் பலம் மற்றும் பலவீனங்களின் பகுப்பாய்வு:**

இந்த வினாப்பத்திரம் (AA34) கற்கைப் புத்தகத்தின் அடிப்படையில் அமைந்த (கோட்பாடுகள், பிரயோகங்கள் இரண்டும் அடங்கிய) ஒன்பது (9) கட்டாய வினாக்களைக் கொண்டுள்ளது. இந்த வினாப் பத்திரம் **பிரிவு A:** ஒவ்வொன்றும் ஐந்து (5) புள்ளிகளைக் கொண்ட நான்கு வினாக்களையும், **பிரிவு B:** ஒவ்வொன்றும் பத்து (10) புள்ளிகளைக் கொண்ட மூன்று (3) வினாக்களையும், **பிரிவு C:** ஒவ்வொன்றும் இருபத்தைந்து (25) புள்ளிகளைக் கொண்ட இரண்டு (2) வினாக்களையும் அடக்கிய மூன்று பிரிவுகளை கொண்டதாகும்.

வினாப்பத்திரத்திலுள்ள அனேகமான வினாக்கள் கற்கைப் புத்தகத்தினை அடிப்படையாகக் கொண்டவை. பரீட்சார்த்திகள் கற்கைப்புத்தகத்தை நன்கு கற்று குறைந்தபட்சம் கடந்த ஐந்து ஆண்டு வினாப்பத்திரங்களுக்கு விடையெழுத பயிற்சி எடுத்திருப்பின், அவர்கள் இலகுவாக 50 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று இந்தப் பாடத்தில் சித்தியடைந்திருப்பர். அகே பரீட்சார்த்திகள் பாடங்கள் பற்றிய அறிவினை கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனினும், பாட அறிவின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையினை தயாரிக்கும் பயிற்சி அற்றவர்களாக உள்ளனர்.

பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த பெறுபேறு திருப்திகரமாக இருந்ததுடன், சில பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட நேரத்தினை நன்கு முகாமைசெய்து, எல்லா வினாக்களுக்கும் ஒருங்குமுறையாக விடையளித்து 75 க்கு அதிக புள்ளிகளை பெற்றிருந்தனர். எனினும் கணிசமான மாணவர்கள் 25 க்கும் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

அனேகமானோர் கிட்டத்தட்ட எல்லா வினாக்களுக்கும் விடையெழுத முயற்சித்திருந்தனர். எனினும், ஒரு சில பரீட்சார்த்திகள் சில பகுதிகளுக்கு விடையளித்திருக்கவில்லை. அதற்கான பிரதான காரணங்களாக தவறான கால முகாமைத்துவம், போதிய அறிவின்மை, வினாக்களை விளங்கிக்கொள்ள முடியாமை ஆகியவற்றை கொள்ளமுடியும். மேற்கூறியவற்றிற்கு மேலாக, திருத்தற் செயன்முறையின்போது பொதுவாக கீழ்வருவன அவதானிக்கப்பட்டன:

- பகுப்பாய்வுத் திறமை இல்லாமை
- தெளிவற்ற கையெழுத்து.
- அதிக புள்ளிகளைக்கொண்ட வினாக்களுக்கு குறுகிய விடையளித்தல்.
- குறைவான புள்ளிகளைக்கொண்ட வினாக்களுக்கு நீண்ட விடையளித்தல்.
- தருநிலை ஆய்வின் பிரச்சினைகளை இனங்கண்ட போதிலும் பொருத்தமான விடை எழுதாமை.
- விடைகளை திட்டமிடாது தொடர்பற்ற விடைகளை ஏழுதுதல்.
- வினாவில் தரப்பட்ட வினா வினைச்சொற்களை சரியாக விளங்கிக்கொள்ளாமை.

## பிரிவு A

நான்கு (04) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 01** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவில் **Tastee Ltd** இன் வியாபாரத்தை பாதிக்கும் புறச்சூழலின் கூறுகள் பற்றி பரீட்சிக்கப்பட்டது. அனேக பரீட்சார்த்திகள் வினாவினை சரியாக விளங்கிக்கொண்டு தெளிவான விடைகளை எழுதி திருப்திகரமான புள்ளிகள் பெற்றனர். இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமாக இருந்ததுடன் அனேகமானோர் முழுப்புள்ளிகளை பெற்றனர். எனினும், சில பரீட்சார்த்திகளின் விடைகள் வினாவுடன் தொடர்பற்று இருந்தமையால் அவர்கள் புள்ளிகள் எதனையும் பெறமுடியவில்லை. அவர்கள் புறச்சூழலின் கூறுகளாக போக்குவரத்து, கூட்டிணைவு ஆளுமை, கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், தொடர்பாடற்சூழல், தரக்கட்டுப்பாடு போன்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 02** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவில் கூட்டிணைவு ஆளுமைபற்றி, விசேடமாக கணக்காய்வுக்குழு மற்றும் ஊதியக் குழு ஆகியவற்றின் தொழிற்பாடுகள் குறித்து வினவப்பட்டது. இந்த வினாவுக்கான ஒட்டு மொத்தப் பெறுபேறு சராசரி மட்டத்தில் இருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் முழுப்புள்ளிகள் பெற்றிருந்த போதிலும், அனேகமானோர் 2 – 3 புள்ளிகளையே பெற்றனர். அனேக விடைகள் □ர்த்தி செய்யப்படாமலும் தொடர்பற்றவையாகவும் இருந்தன. மேலும், அனே பரீட்சார்த்திகள் கணக்காய்வுக் குழுவையும் ஊதியக் குழுவையும் வேறுபடுத்த முடியாதள்ளனர். அனேகமான பரீட்சார்த்திகள் கணக்காய்வுக் குழுவின் தொழிற்பாடுகளாக கணக்காய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் வழங்குதல், கணக்காய்வு அபிப்பிராயத்தினை தெரிவித்தல், வியாபாரத் திட்டங்களை தயாரித்தல், வழுக்களை கண்டுபிடித்தல், புறக் கணக்காய்வினை நடாத்துதல் ஆகியவற்றையும் ஊதியக் குழுவின் தொழிற்பாடுகளாக இலாபத்தையும் வளர்ச்சியையும் மதிப்பாய்வு செய்தல், புறக் கணக்காய்வாளரின் ஊதியத்தை தீர்மானித்தல், கம்பனியின் வருமானத்தை பகுப்பாய்வு செய்தல், உரிய காலத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் அனுப்புதல் ஆகியவற்றையும் குறிப்பிட்டிருந்தனர். .

**வினா இல. 03** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இந்த வினாவில் தரக்கட்டுப்பாட்டு முறைமையின□ மூலகங்கள் பற்றி விளவப்பட்டது. இதன் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் முழுப் புள்ளிகளைப் பெற்றனர். அனேகமானோர் வினாவினை தவறாகப் புரிந்துகொண்டு உற்பத்தி நிறுவனத்தின் தரக்கட்டுப்பாட்டு விதிமுறைகள் பற்றி எழுதியதனால் புள்ளிகளை பெறுவதற்கு தவறினர். தரக்கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்களாக கணிசமான விடைகள் செம்மை, நம்பகத்தன்மை, காலந்தவறாமை, ஒப்பிடற்தகவு, முடிவுப்பொருட்களின் தரத்தினை செவ்வை பார்த்தல், உற்பத்திச் செயன்முறையில் தரநியமங்களை நிர்ணயித்தல், கடமைப் பகிர்வு ஆகியவற்றை எழுதியிருந்தனர்.

**வினா இல. 04** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 05)

இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்த வினாவின் பகுதி (a) யில் நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடத்தலுக்கு ஒரு உதாரணமும், பகுதி (b) யில் வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடல் ஒன்றில் சேவை வழங்குனர் மறையான அபிப்பிராயத்தை வழங்குவதற்கான காரணங்களும் வினவப்பட்டது. கிட்டத்தட்ட சகல பரீட்சார்த்திகளும் பகுதி (a) க்கு சரியான விடையெழுதி இருப்பினும், பகுதி (b) க்கு விடைகள் சராசரி மட்டத்திலேயே காணப்பட்டது. இதற்கு பிரதான காரணம் வினாவை சரியாக விளங்கிக்கொள்ளாது தொடர்பற்ற விடைகளை எழுதியமையே. இவ்வாறான தொடர்பற்ற தவறான விடைகள் நோக்கெல்லை வரையறை, கணக்காய்வுச் சான்று இல்லாமை, பொருண்மையான பிறழ்கூற்றுத் தகவல்கள், மனித வழுக்கள் இருத்தல், கணக்காய்வுக்குத் தேவையான தகவல்களை வாடிக்கையாளரின் ஊழியர்கள் தர மறுத்தல் ஆபான்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

## பிரிவு B

மூன்று (03) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 05** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா பகுதி (A) மற்றும் பகுதி (B) எனும் இரண்டு பிரதான பகுதிகளை கொண்டது. பகுதி (A) யின் (a) பிரிவில் கணக்காய்வுச் சான்றின் போதுமை மற்றும் பொருத்தத்தன்மை பற்றிய கருத்தும் (b) பிரிவில் வெளிவாரி உறுதிப்படத்தலை உதாரணத்துடன் விபரிக்குமாறும் கேட்கப்பட்டது.

(a) பிரிவுக்கான விடைகள் திருப்திகரமாக இருந்ததுடன், அனேகமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகள் பெற்றனர். எனினும் சில பரீட்சார்த்திகள் கணக்காய்வுச் சான்றுகளின் போதுமை மற்றும் பொருத்தத் தன்மையின் கருத்தாக கணக்காய்வு இடர்மட்டம், கணக்காய்வாளர் பயன்படுத்தும் எல்லாச் சான்றுகளும், கணக்காய்வுச் சான்றிற்கு தேவையான ஆவணங்கள், சான்றுகள் அசலாகவும் பொறுப்புடைய அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டு இருத்தல் போன்ற விடைகளை எழுதியிருந்தனர்.

(b) பிரிவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. அனேகமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றிருந்தனர் எனினும் சில பரிட்சார்த்திகள் வெளிவாரி உறுதிப்படுத்தல்களாக மூன்றாம் தரப்பினரால் கணக்காய்வினை மேற்கொள்ளல், நிதிக்கூற்றுக்களை மூன்றாம் தரப்பினர் மீளாய்வு செய்தல், தொக்குக் கணக்கெடுப்பினை வெளித் தரப்பினரால் மேற்கொள்ளல் ஆகியவற்றை எழுதியுள்ளனர்.

பகுதி (B) யில் வரையறுக்கப்பட்ட ஊழியர் பயன் தொடர்பில் தகைமைபெற்ற ஆயுட்காலமுறை கணிப்பீட்டாளர் (actuary) மேற்கொண்ட மதிப்பீடுபற்றிய தருநிலை ஆய்வு தரப்பட்டது. இதில் நிபுணர் ஒருவர் மேற்கொண்ட வேலையாக ஆயுட்காலமுறை கணிப்பீட்டாளரின் வேலையின்போதுமை மற்றும் பொருத்தத் தனமையை மதிப்பிடுவதற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அனேக விடைகள் தரமற்றவையாக இருந்தன. எனினும், வினாவினை மிகவும் தளிவாக விளங்கிக்கொண்ட மிகவும் குறைந்த எண்ணிக்கையான பரிட்சார்த்திகள் அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தனர். தவறான விடைகளில் ஆயுட்காலமுறை கணிப்பீட்டாளரால் வேலைகள் எல்லாம் ர்த்தி செய்யப்பட்டனவா, ஆயுட் காலமுறை கணிப்பீட்டாளரின் ஒருமைப்பாடு ஆகியன அடங்கும்.

**வினா இல. 06** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா பகுதி (A) மற்றும் பகுதி (B) எனும் இரண்டு பிரதான பகுதிகளை கொண்டது. பகுதி (A) யின் (a) பிரிவில் ஈடுபடுத்தற் கடிதத்தின் தேவையும், (b) பிரிவில் கணக்காய்வு ஈடுபடுத்தற் கடிதக் கட்டுறுப்புக்களை மீளாய்வு செய்வதற்கு கணக்காய்வாளர் தீர்மானிக்கும் காரணிகள் பற்றியும் வினவப்பட்டது. இந்த வினாவின் இரு ரிரிவுகளுக்குமான பெறுபேறு திருப்திகரமாக இருந்ததுடன் அனேகமானோர் முழுப்புள்ளிகளை பெற்றனர். எனினும், சிலர் ஈடுபடுத்தற் கடிதத்தின் தேவைகளாக கணக்காய்வுக்கு தேவையான தகவல்களை வழங்குதல், கணக்காய்வு விதிமுறைகளை தெரிவித்தல், கணக்காய்வு அபிப்பிராயத்தினை தெரிவித்தல் ஆகியவற்றை குறிப்பிட்டிருந்தனர்.

பகுதி (B) யில் ஒரு கம்பனியின் சட்டநியதிக் கணக்காய்வில் ஈடுபட்டுள்ள பங்காளர் அதே கம்பனியின் அகக்கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்யும் கணக்காய்வினை ஏற்றுக் கொள்வது தொடர்பில் குறுகிய தருநிலை ஆய்வு தரப்பட்டது. இந்த வினாவில் குறிப்பிட்ட ஈடுபாடினை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் சுயாதீனத்திற்கான அச்சுறுத்தல்கள் பற்றி வினவப்பட்டது. இப்பகுதிக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு திருப்திகரமாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் தருநிலை ஆய்வுடன் தொடர்புபடுத்தாது அச்சுறுத்தல்களை மாத்திரம் எழுதியமையால் முழுப்புள்ளிகளை பெறமுடியவில்லை. எனினும், தருநிலை ஆய்வுடன் தொடர்புபடுத்தி விடை எழுதி அதிகளவு புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளும் உள்ளனர்.

**வினா இல. 07** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 10)

இந்த வினா கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு அபிப்பிராயம் பற்றிய அறிவினை பரீட்சிக்கும் நோக்கத்தைக் கொண்டது. பகுதி (a) யில் ஒரு கணக்காய்வாளர் திருத்தப்படாத கணக்காய்வு அபிப்பிராயத்தினை வெளியிடும் சந்தர்ப்பங்களை குறிப்பிடும்படியும், பகுதி (b) (i) இல் கணக்காய்வாளரின் அறிக்கையில் விடய அழுத்தப் பந்திகளை உட்படுத்தும் தேவை பற்றியும் பகுதி (b) (ii) வில் கணக்காய்வாளர் விடய அழுத்தப் பந்தியை உட்படுத்தும் சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்களும் வினவப்பட்டது.

அனேக பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையெழுதியதுடன், கணிசமான பரீட்சார்த்திகள் சரியான விடையினை எழுதி முழுப் புள்ளிகள் பெற்றனர். சில பரீட்சார்த்திகளுக்கு திருத்தப் படாத அபிப்பிராயம் பற்றிய அறிவு இருக்கவில்லை. அவர்கள் நோக்கெல்லை லரையறை, பொருத்தமான போதிய சான்றுகளை பெறமுடியாமை, முகாமையுடன் இணக்கப்பாடின்மை ஆகிய சந்தர்ப்பங்களில் திருத்தப்படாத அபிப்பிராயம் வழங்கப்படுமென குறிப்பிட்டிருந்தனர்.

பகுதிகள் (b)(i) மற்றும் (ii) ஆகியவற்றிற்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. ஒரு சில பரீட்சார்த்திகள் பொருத்தமான விடைகளை எழுதி முழுப் புள்ளிகள் பெற்றிருந்தனர். அனேக பரீட்சார்த்திகள் வினாவினை முறையாக விளங்கிக்கொள்ளாது, கீழ்வருவன போன்ற தவறான விடைகளை எழுதியிருந்தனர்:

- கணக்காய்வுச்சான்று கிடையாதபோது கணக்காய்வு அறிக்கையில் விடய அழுத்தப் பந்தி உட்படுத்தப்படும்.
- முறையான கணக்குப்பதிவேடுகள் இல்லாத, போதிய கணக்காய்வுச் சான்றுகள் இல்லாத சந்தர்ப்பங்களில் கணக்காய்வாளர் பாதகமான அல்லது முனைப்பழி அபிப்பிராயத்தை தெரிவிப்பார்.

## பிரிவு C

இரண்டு (02) கட்டாயமான வினாக்கள்

**வினா இல. 08** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**பகுதி A**

இந்த வினாவில் அகக்கட்டுப்பாட்டு பலவீனங்களை இனம்காணல், அந்த பலவீனங்களிலிருந்து விடுபட பரிந்துரைகள், தொழில்நுட்பப் பொதுக் கட்டுப்பாடுகள் போன்ற வேறுபட்ட பகுதிகளை சார்ந்த வினாக்கள் வினவப்பட்டன. இந்தப் பகுதி வினா தருநிலை ஆய்வின் அடிப்படையில் நான்கு உப வினாக்களை கொண்டது. கோட்பாடுகளை பிரயோகிப்பதில் பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் மோசமான மட்டத்தில் காணப்பட்டது. இதற்கு காரணம் பரீட்சார்த்திகள் கடந்த கால வினாப்பத்திரங்களிலிருந்து இதுபோன்ற வினாக்களை பயிற்சி செய்யாமையாகும்.

**(a)** இப் பகுதியில் தரப்பட்ட விற்பனைச் செயற்பாட்டில் அகக் கட்டுப்பாட்டப் பலவீனங்களை இனங்காணுமாறு வினவப்பட்டது. அகேகமான பரீட்சார்த்திகள் தருநிலை ஆய்வினை நன்கு விளங்கி திருப்திகரமாக விடைகளை எழுதி முழுப்புள்ளிகள் பெற்றனர். இது ஒரு மிகஇலகுவான வினா. வினா அமைந்த விதத்தில் சராசரி பரீட்சார்த்திகூட வினாவிலுள்ள தரவுகளிலிருந்தே விடை எழுதமுடியும். எனினும் குறைந்த அளவிலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு விடையளிக்க முயற்சித்திருக்கவில்லை. அனேகமான பரீட்சார்த்திகள் முக்கியமான கட்டுப்பாட்டுப் பலவீனங்களை தவிர்த்து ஒரே இடத்தில் அலுவலகத்தையும் களஞ்சியத்தையும் அமைத்தல், தகைமைபெற்ற பட்டயக் கணக்கறிஞர் இல்லாமை, CCTV கமெரா இல்லாமை ஆகியவற்றை பிரதம பலவீனங்களாக எழுதியிருந்தனர்.

**(b)** வினாவின் இந்தப் பகுதியில் மேலே பகுதி (a) யில் இனங்காணப்பட்ட பலவீனங்களில் இருந்து விடுபட பரிந்துரைகளை கூறுமாறு வினவப்பட்டது. இப்பிரிவுக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. அனேகமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர். எனினும், கணிசமான பரிட்சார்த்திகள் பகுதி (a) க்கு எழுதிய பொருத்தமற்ற விடைகள் காரணமாக புள்ளிகள் எதனையும் பெறமுடியாதிருந்தது.

**(c) மற்றும் (d)**

வினாவின் இந்தப் பகுதிகளில் விலைப்பட்டியலிடுதல், தொக்குப் பராமரிப்பு மற்றும் பிற நிதிச் செயன்முறைகளுக்கான கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையில் இருக்க வேண்டிய தகவற் தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள் பற்றியும், தருநிலை ஆய்வின் தரவுகளின் அடிப்படையில் அத்தகைய பொதுக் கட்டுப்பாடுகளுக்கு உதாரணங்களும் வினவப்பட்டது. இந்தப் பகுதிகளுக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்திலும் குறைவாக காணப்பட்டது. பல பரீட்சார்த்திகளால் வினாவை விளங்கிக்கொண்டு பொருத்தமான விடை எழுத முடியவில்லை. மிகவும் குறைவான எண்ணிக்கையான பரீட்சார்த்திகளே திருப்திகரமான புள்ளிகளை பெற்றனர். பகுதி (c) க்கு சரியாக விடை எழுதமுடியாத பரீட்சார்த்திகள் பகுதி (ன) க்கும் சரியாக விடையெழுதவில்லை.

**பகுதி B**

இந்தப் பகுதியில் உறுதிப்பாட்டு அறிக்கையினை வழங்குவதற்காக புறக் கணக்காய்வாளரால் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலில் மேற்கொள்ளவேண்டிய பிரதான மூலகங்கள்பற்றி வினவப்பட்டது. இந்தப் பகுதியின் பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. அனேகமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர் எனினும் சில பரிட்சார்த்திகள் உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் பிரதான மூலகங்களுக்குப் பதிலாக கணக்காய்வுச் செயன்முறைகள், உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் வகைகள் ஆகியன பற்றி எழுதியிருந்தனர்.

**வினா இல. 09** (ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25)

**(a)** இந்த வினாவில் உரிமம் மற்றும் அதன் சூழலை விளங்கிக்கொள்வதில் கவனத்திற் கொள்ளவேண்டிய மூன்று பொதுவான பகுதிகளை அடையாளம்கண்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் வீதம் கேட்கப்பட்டது. மிகவும் இலகுவான இந்த வினாவுக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்திற்கும் மேலாக காணப்பட்டதுடன், கணிசமான அளவு மாணவர்கள் திருப்திகர புள்ளிகளை பெற்றிருந்தனர். எனினும் ஒருசில பரீட்சார்த்திகள் வினாவை உரியமுறையில் விளங்கிக்கொள்ளாது வியாபாரச் சூழலை விளங்கிக்கொள்வதற்கு கணக்காய்வு நிரந்தர கோப்பு மற்றும் வேலைத்தாள்களை மீளாய்வுசெய்தல் ஆகிய தவறான விடைகளை எழுதினர். சில பரீட்சார்த்திகள் இந்த வினாவை முயற்சிக்கவேயில்லை.

**(b)** இந்தப் பிரிவு தொக்குகள் தொடர்புபட்ட குறுகிய தருநிலை ஆய்வு தொடர்பான மூன்று உப வினாக்களை கொண்டது.

**(i)** இந்த வினாவில், தொக்கு தொடர்புபட்ட கணக்காய்வு இடர் பற்றி வினவப்பட்டது. இந்த வினாவுக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டது. அனேகமான பரீட்சார்த்திகள் வினாவை சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. தொக்குகள் தொடர்பான கணக்காய்வு இடர்களை இனங்காண்பதற்குப் பதிலாக, அதிக தொக்கு மட்டங்களை கொண்டிருத்தல், கட்டளை விபரங்களை பார்க்காது பொருட்களை ஏற்றுக்கொள்ளல் போன்ற தொக்குகளை வைத்திருப்பதனால் ஏற்படும் வியாபார இடர் பற்றி எழுதியிருந்தனர். அதனால் அவர்களால் புள்ளிகள் பெறமுடியவில்லை.

**(ii)** இந்தப் பகுதியின்கீழ் மேலே (i) இல் விபரிக்கப்பட்ட கணக்காய்வு இடர்களுக்கு பதிலிறுக்குமுகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வு விதிமுறைகள் பற்றி வினவப்பட்டது. இவ்வினாவுக்கான பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் வினாவை விளங்கி திருப்திகரமான புள்ளிகளை பெற்றனர். பல பரீட்சார்த்திகள் மேலே (i)இல் விபரித்த கணக்காய்வு இடர்களுக்கு பதிலிறுக்குமுகமாக மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வு விதிமுறைகளுக்குப் பதிலாக சிக்கனக் கட்டளைக் கணியத்தின்படி கட்டளைகளை மேற்கொள்ளல், உச்ச தொக்கு மட்டத்தை கிரமமாக கண்காணித்தல், கட்டளை விபரங்களுடன் பொருட்பெறுவனவுக் குறிப்பை செவ்வை பார்த்தல் போன்ற கணக்காய்வு இடரினை குறைப்பதற்கான அகக் கட்டுப்பாடுகள் பற்றி எழுதி, புள்ளிகள் பெறத் தவறினர்.

**(iii)** இப் பகுதியின்கீழ் ஆண்டு இறுதி தொக்கு மீதியை அறுதியிடுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வலுவளிப்பு விதிமுறைகள் பற்றி வினவப்பட்டது. இந்த வினாவுக்கான பெறுபேறு சராசரி மட்டத்தில் காணப்பட்டதுடன், ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் திருப்திகரமான புள்ளிகளை பெற்றனர். அனேகமான பரீட்சார்த்திகள் விளாவை முறையாக விளங்கிக்கொள்ளாது தொக்கு தொடர்புபட்ட அகக் கட்டப்பாட்டினை செவ்வை பார்த்தல், தொக்குக் கணக்கெடுப்பை தொடர்ச்சியாக மேற்கொள்ளல், வழங்குனரிடமிருந்து உறுதிப்படுத்தல்களை கேட்டல் ஆகிய தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**(c)** **(i)** இந்தப் பகுதியில் விசாரணை மற்றும் அவதானிப்பினை உதாரணங்கள் தந்து ஒப்பிடுமாறு கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்தன. அனேகமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளை பெற்றனர் எனினும் சில பரிட்சார்த்திகள் வினாவினை விளங்காது, விசாரணையையும் அவதானிப்பையும் ஒப்பிடாது, தவறான விடைகளை எழுதியிருந்தனர். அனேக பரீட்சார்த்திகள் இரு பதங்களையும் விபரிக்காது, விசாரணையைவிட அவதானிப்பு சிறந்ததென எழுதினர். இன்னும் சிலர் அவதானிப்பிற்கு உதாரணங்களாக, சரியான வாடிக்கையாளருக்கு விலைப்பட்டியல் இடப்பட்டு சரியான தொகை கணக்கிற் கொள்ளப்பட்டதனை உறுதிசெய்ய விற்பனைப் பட்டியல்களை பரீட்சித்தல், வங்கி மீதிகளை செவ்வை பார்ப்பதற்கு வங்கிக் கூற்றுக்களை பரீட்சித்தல் ஆகியவற்றை எழுதியிருந்தனர்.

**(ii)** இங்கு மீள் கணிப்பீட்டினை மீளமேற்கொள்ளலுடன் உதாரணங்களுடன் ஒப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெறுபேறுகள் திருப்திகரமாக இருந்ததுடன், அனேக பரீட்சார்த்திகள் திருப்திகரமான புள்ளிகள் பெற்றனர். எனினும் சிலர் இரு பதங்களுக்கும் இடையில் வேறுபாட்டினை சரியாக இனங்காண முடியாதமையால் புள்ளிகளை பெறமுடியாது போனது.

**(d)** இப் பகுதியில் வழங்குனர் கூற்றுக்களின் கணக்கிணக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்காய்வு விதிமுறைகள் பற்றி வினவப்பட்டது. இந்தப் பகுதிக்கான பெறுபேறுகள் சராசரி மட்டத்திலும் குறைவாக காணப்பட்டது. பரீட்சார்த்திகள் போதிய அறிவினை கொண்டிருக்கவில்லை. பலர் கணக்கிணக்கக்கூற்றில் தரப்பட்ட தரவுகள் பற்றிக் குறிப்பிடாது, பௌதிக அறுதியிடலை மேற்கொள்ளல், விலைப்பட்டியல்களை செய்வை பார்த்தல், சகல கொடுப்பனவு சான்றுறுதிப் பத்திரங்களையும் செவ்வை பார்த்தல் என விடையெழுதினர். மிகக் குறைந்தளவு பரீட்சார்த்திகள் மாத்திரம் சரியான விடை எழுதி முழுப் புள்ளிகளை பெற்றனர்.

\- - -

**பரீட்சையில் பெறுபேற்றினை மேம்படுத்துவதற்காக பரீட்சார்த்திகளின் தகுதி மட்டத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகள்:**

- பரீட்சார்த்திகள் கற்கைப் புத்தகத்தினை நன்கு கற்று உள்ளடக்கத்தை நன்கு விளங்கிக்கொள்ளல் வேண்டும்.
- கணக்காய்வு தொடர்புபட்ட கட்டுரைகள் சஞ்சிகைகள் ஆகியவற்றை வாசித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாவினைச் சொல்லின் அடிப்படையில் வினாக்களுக்கு விடை எழுதவேண்டும் ஆதலினால், வினாப் பத்திரங்களின் இறுதியில் தரப்படும் நிரலில் தரப்பட்டும் பொருள்வரையறைகளை விளங்கிக்கொள்ள வேண்டும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களை பார்த்து வினாக்கள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என விளங்கிக் கொள்வதுடன், குறைந்தபட்சம் கடந்த ஐந்து ஆண்டு வினாப்பத்திர வினாக்களை செய்து பயிற்சித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாப்பத்திரத்தில் தரப்பட்ட கோட்பாடு மற்றும் பரீட்சகரின் எதிர் பார்ப்பு ஆகியவற்றை விளங்கிக்கொண்டு விடையெழுதுதல் வேண்டும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களில் கேட்கப்பட்ட வினாக்களை விளங்கிக்கொண்டு, பாடப்புத்தகத்தில் சிறு குறிப்புக்களை எழுதிக்கொள்ளவேண்டும்.
- கடந்தகால வினாப்பத்திரங்களிலுள்ள வினாக்களுக்கு அவற்றிற்கு அனுமதிக்கப்பட்ட காலத்தினுள் விடையளித்து பயிற்சிசெய்தல் வேண்டும். கால முகாமைத்துவத்திற்கு இது உதவும்.
- கற்கைப் புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயம் பற்றியும் சிறு குறிப்புக்கள் எழுதி, பாடவிதான உள்ளடக்கத்தை ஞாபகப்படுத்திக்கொள்ள ஏதுவாக ஓய்வு நேரங்களில் அவற்றை மீட்டல் வேண்டும்.
- தெளிவான கையெழுத்துக்களில் விடையெழுதுதல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் விடையெழுத ஆரம்பிக்கும் முன்னர் பரீட்சைத் தாள்களில் தரப்படும் அறிவுறுத்தல்களை கவனமாக வாசித்தல் வேண்டும்.
- பரீட்சார்த்திகள் வினாக்களை வாசித்து விளங்கவும் சரியான விடைகளை எழுதுவதற்கு ஏதுவாகவும் தெளிவான மனநிலையில் இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் விடையளிக்கும் நேரத்தை ஒதுக்கி விடையளிப்பதன்மூலம் வினாக்களுக்கு சிறப்பாக விடையளிக்க முடியும்.
- ஒவ்வொரு விடைக்கும் உரிய வினா இலக்கத்தினை பொருத்தமான முறையிலும் சரியாகவும் குறிப்பிடல் வேண்டும்.
- கோட்பாட்டிற்கும் பிரயோகத்திற்கும் இடையிலான தொடர்பினை விளங்கிக்கொள்ளல் மிகவும் முக்கியமானது. தேவையான இடத்து உதாரணங்களை எழுதவும்.
- விடைப்புத்தகங்களை கையளிக்க முன்னர் விடைகள் முறையாக இலக்கமிடப்பட்டு இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- * * * -